# வெண்பனிச் சுவடுகள்



## நவீனன்

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

# வெண்பனிச் சுவடுகள்

♦

நவீனன்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

வைகறை வெளியீட்டகம்

# வெண்பனிச் சுவடுகள்
(கவிதைத் தொகுதி)

பதிப்புரிமை - நவீனன்

முதற் பதிப்பு மார்கழி 1998

வெளியீடு - வைகறை வெளியீட்டகம்

நன்றிகள் :

கணனி வடிவமைப்பு - ராஜன்

ஓவியங்கள் - தீபன்

நூல் உருவமைப்பு - இளையவன்

# உள்ளத்தின் உள்ளே
# ஊறியுள்ள உதிப்புக்கள்.


ஒரு காலை ஒரு மடல் விரிப்பு.......................09
வெண் பனிச்சுவடுகள்..................................13
மௌனித்த மாஸ்கோவின் தெருக்கள்..............23
விலங்குகளை முறித்தெழுந்த மாந்தர்களாய்......31
விலை போகும் வீரத்தின் விளை நிலமே........35
உள் மன யாத்திரை......................................41
விழித்துக் கொள்ளும் அவள் முகம்..................48
கேள்விக்குறியல்ல? முற்றுப்புள்ளியே! ............54
மன விதைப்பு...............................................59
மானிடச்சத்தின் மரணிப்பில்வெடுக்குச்சுதந்திரம்.....64
நிகழ் கால வேண்டுதல்.................................69
உயிர்த்தெழுவீர் உரிமை மீட்கவே..................74
மலரிடை வெளியும் - மனமும்.......................79
புகட்பிரவேசம்..........................................83
விடியாத விடியல்கள்..................................88
இதய முகாரி.............................................92
விழுதுகளுக்கு விதையுண்டு.........................98

### கவிஞரின் ஏனைய கவிதைத் தொகுதிகள் -

1. அணையாத அறிவாலயம்
2. விடியலின் கானம்
3. இன்னமும் இருட்டினில்
4. உறக்கந்தேடும் உலகிற்காய்
5. உனக்குள்ளேயே உள்ளிருப்பு
6. இழப்புக்களையும் இழப்போம்
7. கல்லறைக்குள் கதிரவன்

### கவிஞரால் தொகுக்கப்பட்ட கவிதைத் தொகுதிகள்-

1. கல்லறை மேலான காற்று.
   -வடமாராட்சி =87= நினைவுக் கவிதைகள்.
2. மரணம் வாழ்வின் முடிவல்ல
   - அகிலன் கவிதைகள்.

### கவிஞரின் வெளிவராத கவிதைத் தொகுதிகள்-

1. இன்னொரு விழிப்பு
2. கல்லறைப் பூக்கள்

# சிறகு முறிக்கப்பட்ட வானம்பாடியின் மௌனமான வாக்குமூலம் !

புதுப் புது கண்டு பிடிப்புக்களுடன் அறிவியல் யுகம் விண்ணிலும் மேலாய் விரைகின்றது. பனங்கூடலுக்குள்ளும் கிடுகு வேலிகளுக்குள்ளும் அடைபட்டுக் கிடந்த தமிழுலகம், நவீன உலகினில் புதிய விழிப்பினைப் பெற்றுக் கொள்கையில் தமிழன் என்ற தனித்துவத்துக்காக உங்களைப் போலவே - என் உள்ளமும் உவகை அடைகின்றது.

சிறகு இழந்த வானம்பாடியாய் பறக்க முடியாது துடித்துக் கொண்டிருக்கிறேன்,? வானமே எல்லை என வகுக்கப்பட்ட போதிலும் எந்தன் மனப் பறவைக்கு எப்படிச் சிறகுகள் முளைக்கும் ?

தூரத்து தாயக மண்ணின் நினைவுகளுடனுமாய், துருவக் காடுகளுடன் வெண் பனி முகடுகளில் எங்களின் காலச்சக்கரம் விரைவாய் சுழன்று கொண்டிருக்கிறது.

நாட்கள் தோறும் நவீன மொழியின் புத்துணர்வு எவ்வாறு வளர்ச்சி அடைகின்றதோ, அவ்வாறே கவிதையிலும் நவீனத்துவம் முன்னோக்கிக் கொள்கின்றது.

மகாகவி பாரதியும், அதன் பின்னர் பாவேந்தர் பாரதிதாசனுடனுமாய் எழுச்சி பெற்ற நவீன தமிழ்க் கவிதை வரலாறு,புதிய புதிய முகிழ்ப்புக்களுடன் விருட்சங் கொள்வதும் மகிழ்ச்சிக்கு உரியதாகின்றது .

மரபும், இலக்கணமும் என பண்டிதப் பற்றுக்களில் இருந்து தமிழில் புதுக் கவிதை விடுதலை அடைந்து பல ஆண்டுகள் ஓடிப் போய் விட்டன. ஆயினும் புதுக் கவிதைக்கு எழுபதுகளில் கிடைத்த வரவேற்பும் பின்னர் என்பதுகளில் எழுந்த முகச் சுழிப்புமாய் தத்தித் தத்தி கவிக் குழந்தை வரி! வரியாய் வளர்ந்து கொண்டது.

ஈழத்துப் புதுக் கவிதைகளின் யதார்த்த வீச்சும், களநிகழ்வுகளின் நிதர்சனப் பார்வையினாலும் இன்னோர் படிநிலை வளர்ச்சிக்கு புதுக்கவிதை உத்வேகங்கொண்டது.

இருபத்தோராம் நூற்றாண்டை நோக்கி நவீன யுகம் புதுப்புது இலக்கியங்களை சிருஷ்டித்துக் கொண்டிருக்கையில் நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியில் புதுக் கவிதைகளின் எழுச்சியும் மிக்க அவசியமாகத் தென்படுகின்றது.

பாரதிக்குப் பின்னர் புதுக் கவிதை வளர்ச்சியின் ஏணிப்படிகளாக நிலைத்து நின்ற தமிழ் நாட்டின் - தர்மு சிவராம், ஞானக் கூத்தன், நகுலன், கல்யாண்ஜி, கலாப்ரியா, பழமலய், மு.மேத்தா, அறிவுமதி, அப்துல் ரகுமான, - ஈழத்து எம். நு.'.மான், சேரன், வ.ஐ.ச. ஜெயபாலன், வாசுதேவன், மைத்ரேயி, கி. பி. அரவிந்தன், - மலையக சு. முரளிதரன் என்றவாறு தொடரும் கவிஞர்களின் பட்டியல்.

இவ்வாறு தொடரும் கவிஞர்களின் பட்டியல்களை வரலாற்றின் புகழுக்காகவோ, அல்லது கவிஞர்களின் கவித்துவப் புலமைக்காகவோ நிர்ணயிக்காது நவீன தமிழ்க் கவிதையின் படிக்கட்டுக்களாக அவர்களைக் கணிப்பிடலாம்.

தேசம் விட்டகழ்ந்து பல தூரம் கடந்திருந்தும் - உறவுக்கும் ஊர்ப் பாரம்பரியத்துக்காகவும் அன்றி பழந் தொன்மைத் தமிழின் இலக்கியங்களை பரப்புரைக்கும் - புலம்பெயர் இலக்கியம் - பாரியளவில் விருட்சங் கொண்டிருப்பதும் பாராட்டுவதற்கு மட்டுமின்றி பகுத்து ஆராய வேண்டியதும் காலத்தின் கட்டாயமாகின்றது.

இனி!

பனி படர்ந்த வெண் முகடுகளில் பதியப்பட்ட சுவடுகளாய் இக் கவிதைத் தொகுதி மிளிர்கின்றது.

இடர்களின் இடரிலும் - வாழ்வின் சுவைகள் கூடிய கணங்களிலும் இக் கவிதைகள் வரையப்பட்டன.

உள் மனதில் எழுந்த எண்ணங்களை எண்ணிய படியே வரித்துள்ளேன். கண்ணால்க் கண்டதையும் - நிஜக் கனவுகளாய் மலர்ந்ததையும் நிறக் கலவையாக்கி கவிதைகளில் வர்ணந் தீட்டியுள்ளேன்.

ஓவியத்துக்கு மொழி தேவையில்லை என்பார்கள். கவிதைக்கு உணர்வு தான் மொழி. உணர்வுகளின் உச்ச சந்நிதத்தில் என் மனதும் சிறகை விரித்துள்ளது.

கவிதைகளில் புதைந்துள்ள என் முகம், உங்கள் மனதினில் அலங்கோலமாய்ப்பட்டாலும், வருந்திக் கொண்டு நானே நானாக உங்கள் உணர்வுகளுடன் அரங்கேறிக் கொள்கிறேன்.

என்றும் அன்புடன்
நவீனன்





# ஒரு காலை
# ஒரு மடல் விரிப்பு

முற்றிப் பழுத்த
செம்மாங்கனிகள்
இளஞ்சோலை விரிப்பில்
தென்னங் கீற்றின்
நிழல் விளிம்புகள்

பச்சையாய் படர்ந்திருக்கும்
கமை தாங்கிய நெற்கதிர்களும்
ஆட்காட்டிக் குருவிகளும்.


ஓர் வேளை
சத்திர சிகிச்சையில்
மீள் ஞாபகம் மீண்டதாய்..
அம்மாவின் நினைவுகளும்
அம்மா வாழும் தேச - என் தேச
நினைவுகளும் நெஞ்சினில்
நிலையாய் நிஜமாய்
வலம் வரும்!

வெளியே கொடும் பனி!
தோலுரித்த மானிடத் தோள்களுக்கு
கரடித் தோல் போர்த்தியும்
குளிர் நெஞ்சினில்
என்றும் எனக்கு..

ஆனாலும்
ஞாபகவே
தேச வரையறையும்
உள்ளார்ந்த நினைவுகளுடன்
எப்போதுமாய்,,

நேற்றுத் தான்
நேற்றய பொழுது புலர்ந்தது.
இன்றும் என்றுமாய்,,,
அம்மாவின் கடிதமும்
கனத்ததாய்.
காகிதத் தட்டுப்பாட்டிலும்
அப்பாவுக்குத் தெளிந்த தெரிந்த வரி
கவனமாய் படி!
கவனமாய் படியுங்கோ!

சரி!, அன்புடன் என்றுமாய்,
கடித முகிழ்வை நான்
வரையும் போது
குளிரின் வீக்கம் விரல்களில்
மாத்திரமன்றி
கடிதத்திலுமாய்
சுமை கூடிக் கொள்ளும் -
என்றும் அன்புடனாய்,...
❑





# வெண்பனிச் சுவடுகள். !

ஒரு காலையும் மாலையுமாய்
பனி படர்ந்த
வெண் தெருக்களில்
கனத்த இதயத்துடன் ,
கனாக் கொண்ட மனத்துடனுமாய்
நான் ,.

புகைத்தலும் ,புகைச்சலுமாய்
எரிவைக் கக்கிக் கொள்ளும்
மனிதர்கள் இயந்திரமுமாய்
இயந்திரங்கள் மனிதர்களுக்குமாய்

தெருவை முகில்களால்
மூடிக் கொள்கின்றன!
பனியும் புகாருமாய்,.

வீசிக் கொண்டிருக்கும்
குளிர் காற்றினில்
மூச்சுக்களின் துவாரங்களும்
அடைபட
பனியின் முகடுகள் மீதாய்
பாதச் சுவடுகள்
அடையாளம் இட்ட படியாய்,..

எங்கும் எதிலுமாய்
கண்களின் வீச்சுக்குத் தெரிந்ததாய்
வெண் பனிப் புகார்களின்
காலந் தீட்டிய
வர்ணக் கோலமாய்,,..

இன்றும்
ஏதோ மனக் கனவுகளுடன்
தான் நடை பயின்ற படி
வழமை போல
சந்திப்புக்களும்,திட்டுக்களுமாய்
பல் இழித்த படி
இன்னோர் இரவும் பகலுமாய்
நாட்கள் -என் வாழ்வின்
ஆயுளைக் கழித்துச் செல்லும்.

முற்றி வீழ்கின்ற
பனம்பழத்தோட்டுக் கொண்ட
புளியடி வளவிலுமாய் ,
அணில்க்குறிஞ்சாப் பழத்துக்குமாய்
கெட்டப்போல் அடித்து
ஆ வென ஆவலாய்
அண்ணாந்து விழித்துப்
புசித்ததும்
களவாய் பிடுங்கிய
கறுத்தக் கொழும்பான் மாங்காய்
கடித்து மென்றதுமாய்
ஞாபகங்கள் பலதுமாய்
கரை புரளும்.

குறுகிய வட்டத்துக்குள்
என்னைச் சிறையிலிட்டதாய்
நானே எனக்குள்
சிறைப்பட்டுக் கொள்வேன்
சில வேளைகளில் என்
மனமும் அழுது கொள்ளும்.

இன்னுமொரு தடவை
தாயகக் கனவுகளுடன்
நாட்களின் எண்ணிக்கை
விரைந்து கழியும்,,
விரைவாய் மீளும் நாள்
விரையுமென எண்ணி
கடினமாய்க் கழிந்து கொள்ளும்
வெண்பனி வாழ்க்கை.

ஊருக்கும் உறவின் சீருக்குமாய்
கூடியும் குடியுமாய்
கூத்தும் கும்மாளமுமாய்
கரைந்திடும் தினங்களை
எண்ணாமலே நினைத்து
மீண்டும் மீண்டுமாய்
நெருடிக் கொள்ளும்
உள் மனம்.

எத்தனை எத்தனையாய்
கனவுகள் முளைத்தும்
பின்னரோ
குளிர் காற்றினிலே
கரைந்தோ -பறந்தோ
போயிடும்,.

செங்களம் கண்ட
சிவப்பு மண்ணில்
முன்னைய சாதனைகள்
வரலாற்றை மகிழ்விக்க
இன்றைய சோதனைகளால்
கள மண்ணின் மனமும்
சிவக்கும் -என் மனம்
போலவே.

இன்னும் பலவாய்
நாட்களும் கனவுகளுமாய்
முளைத்து வாடிக் கொள்ளும்.
சாதனைகளுக்கு இடையில் தான்
சோதனைகள் பூரிக்கும்.
இங்கோ சோதனைகளே
வாழ்வாகையில்
சாதனைகள் என்பதற்காகவே
வாழ்வும் கசந்து கழியும்.

கலைந்த கனவுகளுடன்
வெண்பனி முகடுகளின்
வாழ்வின் சுமைகள்
தழும்பாய் பதியும்
இதயத்தினுள்.

துருவ நட்சத்திரங்கள்
மின்னிடும் நாள் விரையுமென
பனி முகடுகளின் மீதான
கூடும் பனி முகடுகளின் மீதான
கழன வாழ்வும்
கனவுகளுடனாய்
கரைந்து கொள்ளும்,.

இப்படியாய் வாழும்
இந்த வாழ்வும்
அப்படியாய் வாழ்ந்த
தாய் மண்ணில் வாழ்ந்த
காட்சிப் பதிவுகள்
மூளையைச் சலவை செய்ய
மீள நினைவுகள்
மீண்ட நினைவுகளாய்
மனதினில் வலம் கொள்ளும்.

கானகக் கதவுகளை
தட்டிக் கொண்டு
யானைகளின் பிளிறல்
கதறலாய்
செவிப்பறைகளை
வெடித்துக் கொள்ள..

தொங்கு மான்களின்
அழகுக் குதிப்புக்களில்
இலைகளின் -கிளைகளின்
சிதறல் நவீன ஓவியமாய்
சேற்றிலும் , சகதியிலுமாய்
வண்ணந் தீட்டிக் கொள்ள..

சூரியக்
கதிர்களின் வீச்சில்
மேனியின்
வியர்வை ஊற்றுக்கள்
மெய் நீரை
ஊற்றுப் படுக்கையில்
பெருக்கெடுத்துக் கொள்ள...

விரிந்த தோகை
மயில்களின் இறகுகள்
கொட்டிக் கொஞ்சிக் குலாவி
அழகுடனாய் ஆடிக் கொள்ள

எத்தி எத்திப் பாயும்
முயல்களின் அபிநயத்தில்...
இப்படி
எத்தனை எத்தனையாய்
கோரங்களின் சோக களமான
போதிலும்
இயற்கையின் அழகு
மனதினை மகிழச் செய்யும்..

வளமிக்க இயற்கையின்
எழிலில் மனம்
மகிழ்ந்து கொள்ள..

இங்கோ ,இதனிலும்
எழிலாய் எதனைக் காண ?
எதனைத் தேட !


வானத்தை முட்டும்
நெருப்புப் பெட்டி அடுக்குகளாய்
கட்டிடக் குவியல்களும்
கற் குவியல்களுமாய்
மனித யந்திரங்களின்
செயற்கை வியர்வை துளியிலும்
எதனைக் காண !
எதனைக் காண ?

பனிகளின் வெள்ளக் காட்டில்
மனமும் இருளை விட்டகல
துடித்துக் கொள்ள..

துயிலாத விழிகள்
இதமாய் ஒளியைத் தேடி
திறந்து விழிக்கவும்..
நெஞ்சின் நினைவுகள்
தாயகக் கனவுகளுடன்
குடில் கொண்டதாய்..
மீண்டும் ஓர் தடவை
விடியாத ஒரு காலை. -
இருண்மைக்குள் ஒழிந்து கொள்கிறது
வாழ்வின் சக்கரங்கள்..

□





# மௌனித்த மாஸ்கோவின் தெருக்கள்

மௌனித்துக் கிடக்கின்றது
மாஸ்கோவின் பனி படர்ந்த
தெருக்கள். !

நாளும் பொழுதுமாய்
தொடர் தொடராய்
இயந்திர சக்கர வண்டிகளின்
ஊர்வலம்.

மண்ணின் உள்ளும்
மேலுமாக பேரிரைச்சலுடன்
திரியும்.

யந்திரமான மனித நெரிசலின்
மத்தியிலும்
மௌனித்துக் கிடக்கின்றது
மாஸ்கோவின் பனி படர்ந்த
வெண் தெருக்கள்.

மீண்டும் 1993 அக்டோபரில்
வெடித்துப் பிளந்தது
பீரங்கி.

இன்று அதன்
வேட்டொலி
அவரோராவிலிருந்து அல்ல!..

சொந்த மக்களின்
வரியில் தயாரித்த தாங்கியிலிருந்து
தான்!

எதிரிக்காய் ஏவப்பட்டதல்ல
போர்க்குண்டு.

ஊர் அறிந்த உற்ற தோழருக்காய்
மீண்டும்
குறி பார்த்தது -
பீரங்கி முனையும்
ஏகாதிபத்தியத்தின் துணையுடனாய்!

அன்றைய -
அக்டோபரில்
வெடித்துக் கிளம்பினர்
பொதுவுடமைக்காய் போல்சுவிக்குகள்.

இன்றைய -
அக்டோபரில்
தூண்டுதலால் எழுந்தனர்
முதலாளித்துவ பூர்சுவாக்கள்

ஏது நிகழ்ந்து என்ன?
ஏது நிகழ்ந்து என்ன?

குருதி வெள்ளத்தில்
முகங்களைத்
தொலைத்த மனிதர்களாய்..

அங்கொன்றும்
இங்கொன்றுமாய்
சுற்றுயிர்களின் உட்பலிப்பு

அரபாத்ஸ்காவிலும்
சீலத்தி புருதியிலுமாய்
திரண்ட மனிதத் தலைகள்
வெருண்டெழுந்த
மக்கட் கூறாம்!

எவர் எவரின்
இதயங்களைத் துளைத்தே
உடன் பிறப்புக்களின்
துர்ப்பாக்கிய
துப்பாக்கிகள்
ரவைகளைக் கக்கிக் கொண்டன...!

ஏது பயன் ?
என்ன விளைந்தது ?
மீண்டும்
மௌனித்தது
மாஸ்கோவின்
தெருக்கள்
எல்லாம்.

எரிந்து கிடந்த
வாகனங்களுக்குள்ளும்
சரிந்து வீழ்ந்த
சிலைகளின் கீழுமாக
எத்தனை எத்தனையாய்
மாஸ்கோவின் மைந்தர்கள்
குருதிக்குள்
கொட்டளித்துக் கொண்டனர்.!

ஆகஸ்டின் 1991இல்
வீழ்ந்த - பொதுவுடமை
மக்களின் சாம்ராஜ்ஜியம்
மீண்டும் மீளவே
விடிந்தெழுந்திடாமல் போனதே!

எங்கெல்லாம் எங்கெல்லாம்
கொதித்தனர்
பொதுவுடமையின் தோழர்களே!
சோஷலிசத்தின் தாயகமே
சிதைந்து போனது!
சிறுக் கொண்ட சிறுமையாளர்களால்
சிதறுண்டு போனதே!

ஆயிரும்
ஆயிரமாய்
பாலருக்கும்
பச்சை நிர்வாணங்களுக்குமாய்
மாஸ்கோவே
கை விரிக்கையில்
எங்கே போயினர்
எம்மருமைத் தோழர்களே!
தோழர்களே , தவாரிஸ்க்களே.

மீண்டுமொரு முறை
லெனினின் புத்திரர்கள்
இங்கே பூமி தானம்
செய்கின்றார்களோ!
அல்லது கொர்பச்சேவின்
இன்னோர்
பொரஸ்த்ரெய்க்காவா ?

விழ்ந்து - கொய்யப்பட்ட
மனிதத் தலைகளின் மேலே
கர்வமேயென
ஓடிச் செல்லும்
டாங்கிகளின் ஓட்டிகளே
நீங்களும் - அவர்களும்
அல்லது
அவர்களும் - நீங்களும்
ஒரே தேசத்தின்
ஒன்றிய தேசத்தின்
பூமி புத்திரர் அல்லவா ?


நீவிர்
ஒரே தேசத்தின்
ஒரே தேசத்தாயின்
பூமி பூத்திரர் அல்லவா ?!

❑

** அரடாத்ஸ்காயா, சீஸ்த்திப்ருதி :
மாஸ்கோவில் மக்கள் கூடும் முக்கியமான
இடங்கள்.

(1993 அக்டோபர் மாஸ்கோவின் கொடூர
நினைவுகளை நினைவுபடுத்தி வரியப்பட்ட
கவிதை.)





# விலங்குகளை முறித்தெழுந்த மாந்தர்களாய்!

இன்றோ , என்றோ
ஓர் நாள்
விலங்குகளை
முறித்தெழுந்த மாந்தர்களாய்
விடியலின்
எல்லைக்கு
நிர்ணயங் கொள்வோம் !

அடிமைகளாகவும்
அடக்கப்பட்டவர்களாகவும்
அடங்கி - ஒடுங்கி
நடுங்கி - பதுங்கி
வெதுங்கி - அணங்கி
வாழ்ந்த வாழ்வுக்கு
முடியலாய்
ஓர் முழக்கமிடுவோம் !

சுயநிர்ணயத்தின்
சுதந்திரக் காற்றினில்
எங்களின் வேள்வி
யாகமேயென
ஆகுதி யாகின்றது !


விடியல் -
ஒரு இரவின்
இறுதி !


விடியல் -
ஒரு காலையின்
மலர்வு !

விடியல் -
முழு மானிடர்களுக்கும்
சுவாசம் !

விடியல் -
ஒரு தேசத்தின்
அடிப்படை !

□





# விலை போகும்
# வீரத்தின் விளை நிலமே

வரலாற்றின்
வரிச் சுவடுகளை
இன்னோர் தடவை
புரட்டிக் கொள்கின்றேன்
வரலாறு கண்ட
வீரமண்ணில் , சில நிமிடங்கள்
என்னை -என்னாலேயே
எரித்துக் கொள்கின்றேன் .

நேற்றுப் போல் தான்
இன்றும் !
ஆனால் நாளையோ
நேற்றுப் போலான இன்றல்ல !
அவுரோராவில் முளைத்துக் கிடக்கும்
மூவர்ண , நட்சத்திர மய
மாயக் கொடிகளும் ..
மூளைக்கு மூளையாய்
பச்சை வர்ண நோட்டின்
பெரிய குறியீடுகளுமாய்
வரலாற்றையே
விலை பேசிக் கொண்டிருக்கின்றன.

அன்றோ
முதலாய் பொழியப்பட்ட
புரட்சியின் வீரக் குண்டினை
முழங்கிய அவுரோரா..
இன்றோ
காட்சிக்கும் , காசுக்குமாய்
முதலாளித்துவதுக்கு
விலை பேசிப் போய்விட்டது.

என் மன நெருடல் ..
இன்னும் பலருக்குமாய் .

மௌனங்கள்
பூகம்பமாய் வெடிக்கும்
நாளும் விரையும் .

ஸிம்னி துவாட்ஸ் மேலாய்
பொழிந்த அவரோராவின்
புரட்சிக் குண்டுகள்
உன்னதப் புரட்சியின்
வரலாற்றுச் செழுமைகள்
எல்லாம்
முகமிழந்து கிடக்கின்றன .

யாருக்கு கூறி
யாது பயன் ?

வானம் மீதாய்
அக்கினிக் குஞ்சுகள்
வீச்சலாய் பறக்கும் வரை
இன்னும் பல
பலதுமாய்
விலை பேசப் படும் !
விலை போயும் விடும் !

நெருப்பாய் எழுந்த
லெனின் கிராட்டின்
மைந்தர்களே!
இன்றோ பூர்சுவாக்களின் பாதச்
சுவடுகளில்
தூங்கிக் கொள்கிறீர்களா ?

யாதும் ஊரே
யாவரும் கேளிரென
திராவிட தேசத்தையே
விழித் தெழச் செய்த
அக்டோபர் சோஷலிசப் புரட்சி!
இன்றோ
அரை வயிற்றுக்காய்
தம்மையே
விலை பேச
விட்டு விட்டனரோ ?

எனக்குள்
மன நெகிழ்ச்சல்
கனலாய் கொதிக்கும்
அனலாய் எரியும்
உளங்களும் உளமுமாய்
நெகிழ்ந்து சிதைவுறும் !


லெனின் கிராட்டின்
வீரப் புதல்வர்களே!
அழிகின்ற
ஓர் வீர தேசத்தின்
வரலாற்றுச் செழிமையினை
பாதுகாத்துக் கொள்வீராக
இனி!
பாதுகாத்திடுவீராய்!

இல்லையேல்,
அன்றொரு தமிழ்க் கவிஞன்
உரத்துக் கூறியதாய்
கட்டிய கோமணங் கூட
பறி போகலாம்
பின் ஏன்
தேசியத்துக்கும், தேசத்துக்குமாய்
உயரவே கொடி
பட்டொளி வீசிப்
பறந்திட வேண்டும்?
☐

*அவரோரா- அக்டோபர் 1917 சோஷலிசப் புரட்சியில் முதலாவது குண்டினை வீசிய கப்பல்.

*விம்ரி துவாரட்ஸ்- மாரிகால அரசமாளிகை





# உள்மன யாத்திரை

சூரியக் கதிர்களின்
எரி வீச்சில்
மேனியை
உருக்காய்
தொட்டுக் கொள்கின்றது
செங்காற்று!

எல்லைகளைத் தொட்டுவிட்ட
விறாய்ப்பில் மனம்
வீம்பாய் ஏங்கிக் கொள்ள
கண்களோ நிஜங்களை
நிர்ணயிக்க முடியாது
போக்குக் கொள்கின்றது.

காகிதங்களில்
கவிதையாகவும் , கனவாகவும்
எழுதப்பட்ட
சொற்களின் குவியல்களில்
விழுந்து
கிடக்கின்றது உள்மனம்.
விழுந்து கிடக்கின்றது
உள்மனம்.

சூரியக் கதிர்களின்
கணை வீச்சில்
எல்லைகளைத் தொட்டு விட்ட
விறாய்ப்பில்
மனதின் மகுடம்
முகில்களையே தாண்டிக் கொள்ள

மீண்டும் மீண்டுமாய்
உள்மனம்
வெளியாத்திரைக்குத்
தயார் கொள்கின்றது.

என்னில் உள்ளது
ஏதெனில் எனக்கே
தெரியாமல்
புறப்பட்டுப் போய் விட்டது
மீண்டும் , மீண்டுமாய்
உள்மனம்.

மணம் வீசிக் கொள்ளும்
மல்லிகைக்கும் ,எனக்கும்
இடைவெளியாய்
நிரப்பிக் கொள்கின்றேன்
மலரின் மணத்தையும்
மனிதத்தின் மனத்தையும்.

எல்லைகளைத் தொட்டு
நினைவுகளை மறுதலித்துக் கொள்ளும்

கனாக் கால பூமிப்பரந்தில்
நாட்களை
எண்ணி வாழ்ந்திடும்
வாழ்வுக்கு
குத்தாய் குற்றிக் கொள்ள
விரும்புகிறது -உள்மனம்
முற்றுப் புள்ளியாய்.

மீண்டும் மீண்டுமாய்
உள்மனம்
புறப்பட்டுக் கொள்கின்றது
வெளியாத்திரைக்கு!

பனித்த வெண் தரைகளிலும்
படர்ந்த அடர்
காடுகளிலுமாய்
எல்லைகளேயற்ற
பாலைவனங்களிலும்
ஆழந்தெரியாத நீலக் கடல்
மேலாயும் உள்மனம்
உலாவிக் கொள்கின்றது.

இராவும்,பகலுமாய்
காடும் கடலுமாய்
அலைந்தோ , உலைந்தோ
அங்கும் இங்கும்
எங்குமாய்
வெற்றிடங்களே இல்லாத
துளைகளில் எல்லாம்
உள்மனம் பரவி
உலாவிக் கொள்கின்றது.

மீண்டும் மீண்டுமாய்
எல்லைகளையே தொட்டுவிட்ட
நிஜ , நினைவுகளில்
உலாக் கொண்ட
உள் மனம்
மீண்டும் மீண்டும்
மீண்டுமாய்
களாக் கொள்ளும்.

வாழ்வின் எல்லையை
உணர்ந்து கொண்ட
உன்னதக் களிப்பினில்

*மீண்டும் மீண்டுமாய்*
*உள்மனம் - யாத்திரையாய்*
*உலாப்போகும்*
*மீண்டும் மீண்டும்*
*மீண்டுமாய்..!*





விழித்துக் கொள்ளும்
அவள் முகம்.

இருட்டின் திரைகளை
கிழித்துக் கொண்டு
எனது முகம்
மீண்டும் கனவுலகில்
சஞ்சாரிக்கத் தொடங்கி விடும்.

காலைக் கதிரவனின்
இளஞ் சுடர்களில்
பனியின் நுரைத்துளிகள்
கரைந்து வழிக்கிக் கொள்ளும்.

எட்டாகியும், பத்தாகியும்
இன்னும் அவளின்
நினைவுகளில் கனவுலகில்
புரண்டு கொள்ளும்
வேளைகளில்
அம்மாவின் கூடிதங்கள்
முனைப்பாய் விழித்துக்
கொள்ளும்.

கவனமாய் படி,
கவனமாய் படி
ஒரு வரிக்கு இரு வசனமாய்
மடல் முழுவதும்
எண்ணிப் பார்த்தால்
நிறைந்திருக்கும்
சொற்கோவைகள்.

முன்னிரவில் உறுத்தலாய்
வைத்த அலாரம்
அலறிக் கொள்ள

அவளின் நிலைவுகளிலிருந்து
கரடி முகமாய்
தேனிக்களவை குலைத்துக்
கொள்ளும் !

இருந்தும், எழுந்தும்
மீண்டும் மீண்டுமாய்
அவளின் முகங்கள்
சட்டியிலும் ,கோப்பையிலுமாய்
வர்ணந்தீட்டிக் கொள்ள
எட்டியும் எட்டாத
பட்டப் படிப்புக்காக
பாலர் பள்ளி மாணவராய்
வீறு நடை கொள்ள
மீண்டும் மீண்டும்
அவளின் முகம்
பக்கங்கள் தோறும்
எல்லாப் பக்கங்கள்
தோறுமாக...

புரட்டியும் விரட்டியும்
புரிந்தும் புரியாத
நூல்களின் விழிம்புகளில்
பக்கம் பக்கமாய்

அவள் இளமை -என்
நெஞ்சினை வருடிக்
கொள்ளும்.!

கடக்கும் பாதையிலும்
பதிந்த சுவடுகளிலும்
அவளோ -அவளுமாய்

ஆதியும்
அந்தமுமற்ற பரமாத்மாவே
தூணிலும் -துரும்பிலுமாய்
இங்கோ -அவள்
துடையிலும், தோள்முட்டிலுமாய்
பாரச்சுமையை காதல்ச்சுமையாய்
ஏற்றி விடுவாள்
இதயப் பலகணியில்.

விழித்தும், குழித்தும்
வேண்டியதும்,வேண்டாததுமாய்
அவித்தோ புசித்தோ
தினங்களைக் கடக்கையில்
பசியின் வறுமை
காதலிலும்
நிறத்தைக் காட்டும்.

கட்டியாளாத காளையை
கட்டாயம் பண்ணி
ஏது பயன் ?
வாழ்வில் எகிறி துள்ளி
எல்லாமுமாய்...
நெடிய வேதனையாய்
தொடரும் காதற் சுமை!

இருட்டின் திரைகளை
கிழித்துக் கொண்டு
எனது முகம் மீண்டும்
யாத்திரையாய்
புறப்பட்டுக் கொள்ளும்.

கதவே இல்லாத
சத்திரமாய்
எவர் எவர்க்குமாய்
திறப்பற்ற வாசலாய்
வரவேற்கின்றது
என் இதயம்.

அவளை மட்டுமல்ல
அவளைப் போல
இன்னும் பல அவள்களை.

❑





# கேள்விக் குறியல்ல !?
# முற்றுப்புள்ளியே!

வெற்றிடங்களை
நிரப்புவதற்கு ,
கேள்விக் குறிகளை
ஏன் பரப்புகின்றீர்கள் ? !
கேள்விக் குறிகளை
ஏன்
விதைக்கின்றீர்கள் ?

புள்ளடி போட
வேண்டுமாயின்
முற்றுப்புள்ளிகளை
எதற்காக தேடுகின்றீர்கள்?

எதற்காக
தேடுகின்றீர்கள்?

விடை கிடைத்ததோ ?
விடிவு கிடைக்குமோ ?
ஏது ஐயம்?
ஏது ஐயம் ?

உங்கள்
வினாக்களுக்கு
நீங்களே கேள்விக்குறியின்
அடையாளப் புள்ளிகள் !

வாருங்கள் ,
தோண்டுங்கள் -
புதை குழிகளையல்ல ,!

புரையோடிப்போன
வரட்டு கௌரவத்துக்கும்
வரலாற்றின்
அநீதிகளுக்குமாய்
சாவுக்குழி
தோண்டுங்கள் !

இனி!
ஏது ஐயம்

கேள்விக் குறிகளை
அல்ல ,
முற்றுப் புள்ளியே
உண்டு!

புள்ளடி போடு
உன் மனதில் .


எமக்கு
ஒன்றே ஒன்று -
தேவை !
கேள்விக்குறியின்றிய

முற்றுப்புள்ளி
காணாத
விடியல் ஒன்றே, !
அந்த
விடியல் ஒன்றே,!

□

( 15.03.1998 சில உள்ளார்ந்த மன
நெகிழ்வுகளால் கோர்க்கப்பட்ட
சொற்கோவையே இவை )





## மன விதைப்பு.

*மனதுக்குள்*
*விதைத்து விட்டேன் !*
*என்*
*மனதுக்குள்*
*விதைத்து விட்டேன் !*

கண்ணுக்கு இனியதாக
களக் கன்றுகள் ,
நாற்று நட்ட
கனி பூமியில்
துள்ளிக் குதித்திடவே

வெண் மணல்ச்
சூட்டினிலும்
சுறாவும் , சூடையுமாய்
நீலக்கரையினை
நோக்கி
சூழ் கொண்டிடவே

பனந்தோட்டப்
பசுமையில்
இளம்
பைங்கிளிகள்
காதல்ச் சுவையினில்
தூர தேசம்
பறந்திடவே !

கருஞ்சூட்டிலும்
காகங்கள் கரைந்தே
இரவின் இருமையைக்
குறைத்திடவே!

சங்கீத சந்நிதானத்தில்
செவ்வரத்தம் பூ
சிரித்தே
மலர்ந்தே - விடிவிற்கு
முன்பாய்
சிலிர்த்திடவே !

எல்லாவற்றுக்கும்
இயற்கையின் தார்ப்பரிய
யதார்த்தம் இருக்கையில்
எமக்கு மட்டும்
ஏன்
காற்றின்
சுதந்திரத்தைச் சுவாசிக்கக்
கூட , சுதந்திரமற்று
சுகமிழந்து மடிகின்றோம் !
காற்றின்
சுதந்திரத்தைச் சுவாசிக்கக்
கூட , சுதந்திரமற்று
சுகமிழந்து மடிகின்றோம் ?


காற்றைக்கூட
கணப் பொழுதினில் - ஆளும்


கர்வங்கொண்டவர்கள்
கவர்ந்து விடுவர் !
கவர்ந்தே விடுவர் !
கவனம் !
காற்றைக்கூட
கவர்ந்து விடுவர் !

என்
மனதுக்குள்
விதைத்து விட்டேன் !
என்
மனதுக்குள்
விதைத்து விட்டேன் !

காற்றுக்கும் கூடவே
விதைப்பாய் இட்டுவிட்டேன் !
சுதந்திரமாய் அது
வீரியமாய் வீசிடவே !
வீசிடவே!

❑





## மானிட எச்சத்தின்
## மரணிப்பில் எவருக்குச் சுதந்திரம்?

ஏதடா மனிதா
ஏதடா?
உனக்குள் விழுமியிருக்கும்
மானிடத்தின் எச்சங்களை
விலை பேசி விட்டு
மனிதாபிமானம் பற்றி
காகிதத்திலும் - காற்றிலுமாய்
பரவி விட

மனிதாபிமானம் பற்றியே
காகிதத்திலும் - காற்றிலுமாய்
பரப்பியே விட!
ஏதடா மனிதா
ஏதடா?
உனக்குக் கிடைத்தது
உள உரிமை!
உள உரிமை!

மானிடம்
மரணிக்கையில்
இங்குள்ள மாந்தர்களின்
மனங்களில்
எழுவது
என்னவோ ?

எம் குருதியையும் -
வரலாற்றின்
தார்ப்பரியத்தையும்
மறுத்தும் - மறுதலித்தும்
அந்நியவனின்
காலடிகளுக்கு
சொர்ப்பன மாலையை
சுகமாயிட


இவர்களுக்குள்ளது
என்னவோ?
இல்லையேல் - இல்லையேல்
மரணித்துக்கிடந்த
எங்களுக்கில்லாத -
அந்நியோந்நியமான சுதந்திரத்திற்கு
இவர்கள்
எவ்வண்ணம்
விழா - விழா கொள்வர் !

தொலைந்தது - எம்
கௌரவம் மாத்திரமன்றி
தொலைக்கப்பட்டது-
எங்களின்
சுயநிர்ணயத்தின்
சுதந்திர மூச்சும்
தான்!

ஆயினும்!
ஆயினுமாய்
ஆயினும் எங்களுக்காக ஓர்
எங்களால் ஓர்
விடியல் மிளிர்கையில்
எழுவர் இவரும்

வருவர் !
மீண்டும் சுதந்திரமாய்
வசந்த விழா கொண்டாடி
மகிழ்வர்
எங்களின் இதய பூமியிலே!

எங்களுக்காக
மட்டுமல்ல
உங்களுக்குமாக
விடியட்டும்
புதிய பூபாளம் !
வசந்தமாய்
விடியட்டும்
புதிய பூபாளம் !
□





# நிகழ்கால வேண்டுதல்

அனலாய் வீசிக்
கொண்டது கந்தகக் காற்று.
அதிர்வாய் -டெரும்
அதிர்ளாய் வெடித்துக்
கொண்டது
இயந்திரப்பறவையின்
எச்சக் குண்டுகள்.

நெடிய வாடையில்
துண்டும் துகள்களுமாய்
அங்கும் இங்கும்
அங்கத் துண்டுகளாய்
மனிதக் குவியல்.

இயந்திரப் பறவை
கொட்டி வீசிய
இரும்புக் குண்டுகளால்
எத்தனை கோரம்,
எத்தனை கோலம்!...

இருப்பை நிவிர்த்தத் தானே
இவர்
உயரக் கை எழுப்பினர்.
பிறகு ஏன்
கைகளையே
வெட்ட வேண்டும் ?

எதற்காய்
கரங்களையே முறிக்க
வேண்டும் ?


உயரப் பறக்கும்
பறவைகளின் சிறகுகளையா
முறிக்க
ஆவல் கொண்டனர் ?


கடினமான வாழ்வின்
கஷ்டங்களை நிறுத்தத் தானே
கடுமையாய்
காவல் கொண்டனர்!
பிறகு ஏன்
வேலியே பயிரை
மேய்ந்து கொள்கின்றது ?

களைகளை அகற்றி
நாற்றுக்கள் அல்லவா
பூரித்துக் குலுங்க
வேண்டும்.
பிறகு ஏன்
களைகளுக்கு உரமூட்டுகின்றனர்
நாற்றுக்களையே
நாசமாக்கியே!..

உரிமைக்காய்
சுய -உரிமைக்காய்
உயரக் குரல்
கொடுத்தோர்க்காய்
உதவும் கரங்களை
நீட்டிடுவீர் -உம்
நேசக்கரங்களை.

□





# உயிர்த்தெழுவீர் உரிமை மீட்கவே

குரல்வளை நெரிக்கப்பட்டு,
மெய் வாய்க்கும்
பூட்டுமிட்டு,
உணர்வுகளும்
மௌனமாக்கப்பட்டு,
மாந்தர் அவர் தம்

கண்களும் குருடாக்கப்பட்டு,
செவிப்புலனற்ற
ஜென்மங்களாய்,
மனிதமும் மரணித்துக்
கிடக்கின்றது -எங்கள்
தேசம் எங்கினும்!
எங்கினுமாய்!

மூன்றாம் நாளதனில்
உயிர்த்து எழுந்தீர்.
பாரம் சுமந்த சிலுவையால்
தோள் மேல் தோளாய்
வலி
மேலும் மேலுமாய்..

மனிதத்துக்காய் மரித்தீர்.
மானிடர்க்காய் மரணித்தீர்.
மற்றோர் தடவை
மனிதர்க்காய்
உயிர்த்தெழுவீராக!

அறுத்து வீழ்த்திய சிரங்கள்
தெருக்கள் எங்கெனும்,
கையும் காலுமாய்

களையாளப்பட்ட இதயங்களுடன்
வீதிகள் விறைப்பாகியுள்ளன.

கொலையுண்ட
மானிட முளைப்புக்கள்
எங்கும்
எங்குமாய்.

இருண்ட வாழ்வுக்கே
ஒளியேற்றினீர்!
எமக்காய்
மரணத்துள்ளும் வாழ்ந்தீர்!
எமக்காய்
மரித்த நீவிரே எழுந்திடுவீராக!
எமக்காய்
உயிர்த்தெழுந்திடுவீராக!
எமக்காய்
மானிடத்தின் மகிழ்வுக்காய்!


தேசமிழந்தும் தேகமிழந்தும்
எல்லாமுமே இழந்தும்
இழப்பதற்கு
இழப்பைத் தவிரவே !
ஏதுமே இன்றி! நாமுமாய்


இறப்பதற்கு இறப்பைத்
தவிர!
எமக்காய்
மீட்பராய் வருவீராக !
எமக்காய் மீண்டெழுவீராக
நீவிர் நீவிராக
மாண்டவர் மாண்டவரே
மாளாமல் மரிப்பினை
மறுதலிக்க
உயிர்த் தெழுவீரே
உரிமை வேண்டுவோர்க்காய் !

இரட்சகர் நீர்
மீண்டொரு முறை
உயிர்த்தெழுவீராக !

இனிய வெள்ளியிலும்
புனித ஞாயிறிலுமாய்
தினக் காட்டியில் இல்லாத
நாள் ஒன்றிலோ
எம் மக்களுக்காய்
மீண்டொரு முறை
உரிமை மீட்கவே
உயிர்த்து எழுவீராக !

❑





# மலரிடை வெளியும் - மனமும்

மாலைகளை
இட்டுக்கொள்கின்றன
மலர்ச் செண்டுகள்
ஒவ்வொன்றுமாய் !

கனியைத் தேடும்
செவ்வண்டுகளும் ,
இனியைத் தேடும்
தேனீக்களுமாய்
ஒவ் வொன்றும் -
ஒவ் வொன்றுமாய்
இனிமையைத்
தேடிச் செல்லவே!

மனதில்
எழுதிக் கொள்ள
வைராக்கியம்
படைத்த
மானிடங்கள்
எங்கேயோ ?
மானிடங்கள்
எங்கேயோ ?

யாருக்கும்
கூறிக் கொள்ளாமல்
விடை கொடுத்தேன் ,
இயற்கையை
மறந்த - என்
மனதிற்கு!

இயற்கையை
மறந்த - என்
மனதிற்கு!

மீண்டுமாய்
மலர்ச் செண்டுகளால்
வணங்கிக் கொள்கிறேன்!

□





# யுகப் பிரவேஷம்

முகில்களின் மீது
அனலாய் எரிந்து
வானமே பொரிந்து வீழும்.

தரைமேல் புற்களும்
புதர்களும்
எரிமலைப் பிளம்புகளாய்
தொடராய் வெடிக்கும்.

மீண்டும்
ஒரு தொடுகையில்
கடலின் அலைகள்
உச்சமாய்
உயரக் கிளம்பும்.

வெள்ளியும் நட்சத்திரமுமாய்
சூரியக் கதிரின்
பிளம்புகள்
தலைதனில் வெடித்துக்
கொட்டும்.

கவலைகளை மறந்து விட்டு
கடதாசிகளை தேடிக்
கொண்டிருக்கையில்
மீண்டும் ஒரு
பனிப்புயலாய் -
புகார்களின் மீதாய்
வெண்துகள்கள்
மூச்சையே விழுங்கும்.

இரண்டும் ஒன்றுமாய்
சூரிய சந்திரர்
எல்லைகளைத் தமக்குள்ளே
இட்டுக் கொள்ள
இருண்டதாய் ஒரு
கிரகப் பிரவேசம்
எல்லோர் மீதாயும்
தெளித்து மிளிரும்.

மீள
ஒரு தொடுகையில்
வானத்தின் எல்லைகளைத்
தொட்டுக் கொண்ட
உன்னதத்தில்
மக்கட் குழாம்
மணலுக்குள் முகத்தை மூடி
மகிழ்ந்திருப்பர்.

வெள்ளியும் நட்சத்திரமுமாய்
சூரியக் கதிரின்
பிளம்புகளால் தலைதனில்
எச்சங்களாய்
விழாமல் வெடித்துக்
கொட்டும்!..

இன்னோர் தடவை
யுகந்தனில்
அக்னி நட்சத்திரமாய்
எல்லோரும் உட்டலிக்க
கருகந்தரித்த கன்னிகள்
கவலை இன்றியே
காமக் காதல் கொள்வர்.

எல்லோரும்
எல்லோருக்குமாய்
உட்டலிக்க மீண்டும்
ஒரு யுகப் பிரவேசம்.
மீண்டும்
ஒரு யுகப் பிரவேசம்.

வானம் இடிந்து வீழும்
மீள ஒரு தடவை
தொடுவானம்
அலைகளின் மேலாய்
வானவில்லைக் கூடக்
கீறிக் கொள்ளும்..

□





## விடியாத விடியல்கள்

எத்தனை எத்தனையாய்
இரவுகளும்
விடிந்து கொள்கின்றன!

அவற்றுக்கு என்ன ?
விடிந்தும் , விடியாததுமாய்
சேவல் கூவியும்
கூவாமலுமாய் ,
காகங்கள் கரைந்தோ ,
கணங்கள் புலர்ந்தோ ,
மீண்டும் அடுத்ததாய்
இருண்டும் ,
விடிந்தும்
கொள்கின்றன - இதுவே
இயற்கையின்
யதார்த்தம் !

இயற்கையின்
நிதர்சனம் மானிடர்க்காய்
தரிசனம் கிடைப்பதும்
இல்லையோ?

அழுகின்ற குழந்தைக்கும்
முலைப் பால் வற்றிய தாயின்
கண்ணீருக்குமாய்
மரணித்துக் கிடக்கின்றதோ ,
உறங்காத
உலகம் !

இப்படி , எத்தனை
எத்தனைக்கெல்லாம்
விடியல்களே விடிவதில்லை.

இருட்டுக் கம்பிகளின் பின்னாலும்
கருண்ட கொலைக் கூடங்களிலும்
கதறி வாழும்
மானிடர்க்காய்
எப்போது
விடியும் , விடியல் !

❑





# இதய முகாரி

முகங்களையே
இழந்து விட்டு
முகமூடிகளை தேடிக்
கொண்டிருக்கின்றோம்!

நிஜங்களின்
நிழல்களில் இழந்தது
உளங்கள் மாத்திரமின்றி
உணர்வுகளுந்
தானுமோ!

வெளிச்சத்தை வேண்டி
மெழுகுவர்த்திகளும்
மருகி,உருகி
தியாகித்தன.

இழப்பதற்கு ஏதுமே
இன்றி- இனி
இழப்பதற்கு ஏதுமே
இன்றி - இனி
இறக்கவே!

தியாகித்துப் படைத்தனர்,
எங்களின்
கௌரவத்துக்கும்
மானத்துக்குமாய்!

வரும் பரம்பரை
வாழ -அவர் தம்

தீரத்தியாகங்களால்
நிமிரச் செய்தனர்
நிலையாய்
நாளைய -நாளையுமே,!
நாளைய
நாளையவர்க்குமாகவே!

இரந்து கேட்கவும்
இழிதாய்
பிச்சைப் பாத்திரம்
ஏந்தி
மடிந்து வீழ்வதை
விட
கொடிய கோரங்களுக்கும்
நரக வேதனைகளுக்கும்
முற்றும்,
முழுவதுமாகவே
முகங்கொடுப்போம்!

முகத்தை
இழந்தாயினும் எங்களின்
தேசத்தின் முகவரிகளே
எல்லை இடட்டும்!
மானிடத்துக்கு மகுடம்

சூட்டியே
எல்லை இடட்டும் !

தந்தால்த் தருவதற்கும்
அழுதழுது
வாங்கிக் கொள்வதற்கும்
உரியதல்ல -எம்
இதயச்சுதந்திரம்!

செய்தோ
அன்றில்
செத்து மடிந்தோ
மீட்கப்பட்டதே
எம் புதிய
வரலாறு!

அறுக்க அறுக்க
நறுக்க நறுக்க
முளைத்துக் கொண்டே
இருப்பர்,
ஆணிவேர் அறுபடினும்
எங்களின்
ஆழவேர் சுதந்திரத்துக்காகவே
நிலைத்து நிற்கும்!

*வேண்டியதும் ஒன்றே!*
*வேண்டப்படுவதும்*
*ஒன்றே!*

*ரணத்தைக் கொடுத்தே*
*கனைத்த வெள்ளங்களில்*
*விடிந்து கொள்ளும்*
*புதியதாய்*
*பூபாளம்!*
*எங்களின் இதயப் பூபாளம்!*

❑





## விழுதுகளுக்கு விதையுண்டு

நேற்றுள்ள வரையில்
எங்களுக்காக
வீசிக்கொண்டிருந்த
செங்காற்று
அனலாயிற்று!

வேற்றுமையில் வெந்தன
எல்லைமுமாயின வெறுமைகள்
எல்லைமுமாயின வெறுமைகள்

சோதனைகள்
நினைவுக்கு அன்றி
அதனிலும் மேலாக!

எங்கள்,
எங்களுக்கான
வேதனைகள்
மண்ணதனில்
மேலோங்கிற்று!
வேதனைகளால் வெந்ததும்
எம் மண்ணே !

விருட்சமே
பிடுங்கி எறியப்பட்டு
எங்கள் விழுதுகளுக்கு
விதையின்றி
விடுமோ? - என
வீறாப்பு எழுந்திடும்
வீணாக மனதினில்.

ஆயினும் - எங்கள்
ஆயினும் - எங்கள்
ஆகுதி இன்னும்
விழ்ந்திடவில்லை
ஆண்ட பரம்பரை
அழுதழுது
அகதியாய்
நாடும், நாட்கணக்குமின்றி
வருசங்களே போனாலும்
எங்கள்
மனதினில் உரமேறிய
விடுதலைக் கொழுந்துகள்
வீரியங் கொள்கின்றன!

வெகு தூரமில்லை
எங்கள்
வசந்தத்தின் வாசல்!
❑

## *தமிழ் என் இரத்தம்!*
## *கவிதை என் உயிர் மூச்சு!!*



*மரணம் வாழ்வுக்கு முடிவென்ற மரபின் எல்லையை மீறி நவயுக வரலாற்றின் சுவடுகளில் நிலைத்து நிற்பது தான் கவிதையின் புதுமை. இந்தப் புதுமைக்கு உன்னத உயிர் கொடுக்க வேண்டியது கவிஞர்களினது காலத்தின் கட்டாயக் கடமை.*

*மானிடத்தின் விடுதலைக்காய் வையகம் எங்குமாய் சுதந்திரப் போராட்டங்களும், வீரப் புரட்சிகளுமாய் நடைபெற்று வருகின்றன. சுதந்திரம் மறுக்கப்பட்ட, விடுதலையின்றி அடக்கப்பட்ட மக்களின் போர்க்கருவியாக ஆயுதங்கள் மாத்திரமின்றி கவிதையும் ஓர் கருவியாக அமைகின்றது. கடுங்கொடூர ஏகாதிபத்திய அடக்கு முறைகளுக்கு எதிராய் போராடும் மக்களின் போர்வாளே கவிதையாகின்றது.*

*மனித உயிர் மூச்சின் சுதந்திரக் காற்றாய் கவிதை தென்றலாய் வீசுகின்றது. அடக்கி ஒடுக்கப்பட்டவர்களின் வீரக்குரலாய் கவிதைகள் முழங்குகின்றன.*

*நிகழ்கால கொடூரங்களின் முடிவிற்கு விடிவே முடிவென போராடும் மக்களுடன் கவிதையும் இணைந்து கொள்கிறது. போரிடும் மக்களுடனுமாய், அவர்களின் சுதந்திரத்துக்குமாய்.*

*உணர்வுகளுக்கு மாத்திரம் வண்ணந் தீட்டிக் கொள்வது மட்டுமின்றி உயிர் வாழ்வின் யதார்த்தத்தை வெளிப்படுத்துவதும் கவிதையாகின்றது.*